**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 04.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பீகாரில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் இன்றுடன் ஓயும் நிலையில், **தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெறும்** என, பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தின் ஏரிக் கட்டமைப்பு உட்பட, நாட்டின் **பாரம்பரிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஏற்பாடு**கள், LiFE இயக்கத்தினால் புத்துயிர் பெறுவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், **கேரளத்தில்**, கடலோர சமூகத்தினர் உட்பட அனைத்து பிரிவினருக்கும், மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 12 மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களில், **சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி**கள் இன்று தொடங்கி உள்ளன.

------------------

*பீகார்-மோடி* (10)

பீகாரில், நாளை மறுநாள் 6ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான, தேர்தல் பிரச்சாரம், இன்றுடன் ஓயும் நிலையில், இத்தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெறும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி மூலம், கடந்த 20 ஆண்டு சாதனைகளை முறியடிக்க, பீகார் மக்கள் தீர்மானித்து விட்டதாக, இன்று, பீகாரைச் சேர்ந்த பெண் பிஜேபி தொண்டர்களுடன் நடத்திய கலந்துரையாடலில், அவர் கூறினார். பாரதீய ஜனதா கட்சியின் **எனது வாக்குச் சாவடி-வலுவான வாக்குச் சாவடி** திட்டத்தின் கீழ், இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

------------------

*மோடி சுற்றுச் சூழல்* (9)

சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை என்னும் இந்தியாவின் LiFE இயக்கத்தினால், தமிழகத்தின் ஏரிக் கட்டமைப்பு முதல், ராஜஸ்தானின் ஜோஹத் சிற்றணைகள் வரை, சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான, பல்வேறு பாரம்பரிய நடைமுறைகள் புத்துயிர் பெற்று வருவது குறித்து, மத்திய அமைச்சர் திரு. பூபேந்தர யாதவ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். **சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் கூடிய நீடித்த வளர்ச்சி** என்பது, போற்றி வளர்க்க வேண்டிய பழக்கமே தவிர, பேச்சு வார்த்தைகளால் தொடங்கக் கூடியது அல்ல என்பதே, **உலகிற்கு இந்தியா வழங்கும் செய்தி** என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

-------------------

*முர்மு* (18)

**தனிநபர் சுயசார்பு**க்கு அப்பாற்பட்டு, சமூகம், மற்றும், நாட்டின் வளர்ச்சிக்கும் கல்வி மிக முக்கியம் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். 3 நாள் உத்தராகண்ட் பயணத்தின இறுதி நாளான இன்று, நைனிடால்-லில், **குமாவோங்** பல்கலைக் கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மாணவர்கள் தாங்கள் பெற்ற கல்வியை, தங்களின் சொந்த அறிவுத் திறன் மற்றும் பண்புகளின் மேம்பாட்டிற்கும், நலிவடைந்த பிரிவினரின் சேவைக்கும் பயன்படுத்த வேண்டும் என்றார். இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதால், உத்தராகண்ட் உட்பட, அனைத்து மாநில இளைஞர்களுக்கும் பல புதிய வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சூரிய சக்தி மின்சாரம் உள்ளிட்ட துறைகளில், குமாவோங் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வரும் முயற்சிகளை குடியரசுத் தலைவர் பாராட்டினார். நாட்டில் ஆராய்ச்சி, புதுமையாக்கம், மற்றும், தொழில் முனைவை ஊக்குவிக்க, உயர்கல்வி நிறுவனங்களும், கிராமப்புறங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண, மாணவர்களும், முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

-------------------

*ஜிஎஸ்டி-கேரளா 1* (6)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை

ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், கேரளத்தில், பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…..

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி – கேரளா 2* (18)

**(வாய்ஸ்)**

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், கேரளத்தில், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், கடலோர சமூகத்தினர், மற்றும், சிறு வியாபாரிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. கேரளத்தில் 3 லட்சம் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் முந்திரி தொழிலுக்கு, ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், முந்திரி உற்பத்தியாளர்கள், மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். காபி அடிப்டையிலான உற்பத்திய பொருட்களும், மிளகு உள்ளிட்ட மலையகப் பொருட்களும், 18 சதவிகித ஜிஎஸ்டி அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள காபி தோட்டங்களும், மலையகப் பயிர்ப் பண்ணைகளும் ஊக்கம் பெற்றுள்ளன. பதப்படுத்திய மீன், மற்றும் கடல உணவு பொருட்கள் மீதான ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், கடலோர பகுதிகளின் பொருளாதாரம் வலுவடைந்துள்ளது. கேரளத்தின் புகழ்பெற்ற ஆயுர்வேதத் துறையில், வரிக் குறைப்பினால், மருந்து விலை, மற்றும் சேவைக் கட்டணங்கள், 6 முதல் 11 சதவிகிதம் வரை குறைந்துள்ளன. புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், கேரளத்தில், ஊரகப் பகுதிகள், கடலோரப் பகுதிகள் உட்பட எல்லா பகுதிகளிலும், பொருளாதாரம் ஊக்கம் பெறுவதை தெளிவாகவே காணமுடிகிறது.

-------------------

*ராதாகிருஷ்ணன்* (12)

ஏழைகள் உட்பட அனைவருக்கும், சிறந்த மருத்துவ வசதிகள் கிடைக்கும் வகையிலான, முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை நோக்கி, இந்தியா பயணித்து வருவதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். 2 நாள் கேரளப் பயணத்தின் நிறைவு நாளான இன்று, திருவனந்தபுரம் **சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்**தில், நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். உயிரி மருத்துவ ஆராய்ச்சி, மற்றும், மருத்துவப் புதுமைகளில், **சித்திரைத் திருநாள் உயர்கல்வி நிறுவனம்** எட்டியுள்ள சாதனைகளை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சி ஒன்றையும், குடியரசுத் துணைத் தலைவர் திறந்து வைத்தார்.

இந்நிறுவனத்தில், ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்த தேவையான எல்லா உதவிகளையும் அரசு வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

------------------

*வாக்காளர் பட்டியல் 1 (8)*

தேர்தல் ஆணையத்தின் 2ஆம் சுற்று சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள், தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்கள், மற்றும் புதுச்சேரி உட்பட 3 யூனியன் பிரதேசங்களில் இன்று தொடங்கி உள்ளது. குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், மேற்குவங்கம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களும், அந்தமான் நிக்கோபார், லட்சத் தீவுகள் உள்ளிட்ட யூனியன் பிரதேசங்களும் இதில் அடங்கும். புதுச்சேரியில், சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடங்கி இருப்பது குறித்து ஒரு செய்தி தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*வாக்காளர் பட்டியல் 2 (15)*

**(வாய்ஸ்)**

புதுச்சேரியில், இன்று முதல், வரும் டிசம்பர் 4ஆம் தேதி வரை, வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள், வீடு, வீடாக சென்று கணக்கெடுக்கும் பணிகளில் ஈடுபடுகின்றனர். இப்பணிகளின் போது, முன்கூட்டியே நிரப்பப்பட்ட படிவங்கள், ஏற்கனவே உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, முழுமையாக நிரப்பப்பட்ட படிவங்கள் சேகரிக்கப்படும் என்றும், வீட்டில் இல்லாத வாக்காளர்கள், முகவரி மாறிய வாக்காளர்கள், மற்றும், இறந்து போன வாக்காளர்களை அதிகாரிகள் இனம் கண்டு, விவரங்களை சரிபார்ப்பார்கள் என்றும், தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் தெரிவித்துள்ளார். எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுப் போவதை தவிர்க்கும் வகையில், அதிகாரிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தபட்சம் 3 முறை வருகை தருவார்கள் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பணிகளை தொடர்ந்து, வரைவு வாக்காளர் பட்டியல், டிசம்பர் 9ஆம் தேதி வெளியிடப்படும். 2026 ஜனவரி 8 வரை, கோரிக்கைகள், மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்யலாம். கோரிக்கைகள், மற்றும், ஆட்சேபனைகள் மீது, ஜனவரி 31ஆம் தேதி வரை விசாரணை

*வாக்காளர் பட்டியல் 3 (6)*

மேற்கொண்ட பின்னர், 2026 பிப்ரவரி 7ஆம் தேதி, இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், 24 ஆண்டு இடைவெளிக்கு பின்னர், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படுவதும், கடைசியாக இப்பணிகள், 2002ஆம் ஆண்டு, ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு மேற்கொள்ளப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

--------------------

*புதுச்சேரி அதிமுக (9)*

புதுச்சேரியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் இன்று தொடங்கி உள்ள நிலையில், வாக்காளர்கள் விழிப்புடன் இருந்து, விடுபட்ட பெயர்களை பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, அஇஅதிமுகவின் **ஓ.பி.எஸ். அணி**யினர், நெல்லித்தோப்பு தொகுதியில் வீடு-வீடாகச் சென்று, துண்டுப் பிரசுரங்களை வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பின்னர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓம்சக்தி சேகர் செய்தியாளர்களிடம் பேசுகையில், வாக்காளர் பட்டியல் திருத்தப் பட்டியலை தாங்கள் வரவேற்பதாகவும், அவசர கதியில் இப்பணிகள் தொடக்கப் பட்டுள்ளதாக கூறப்படுவது, ஏற்கத் தக்கதல்ல என்றும் கூறினார்.

--------------------

*குமாரசாமி* (13)

சிறப்பு வகை எஃகு உற்பத்தியாளர்களக்கான, உற்பத்தியுடன் இணைந்த, 3ஆம் கட்ட ஊக்குவிப்புத் திட்டத்தை, மத்திய எஃகுத் துறை அமைச்சர் திரு. ஹெச்.டி குமாரசுவாமி, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். 6 ஆயிரத்து 300 கோடி ருபாய் செலவிலான இத்திட்டத்தினால், வரவிருக்கும் ஆண்டுகளில், நாட்டின், சிறப்பு வகை எஃகு உற்பத்தித் திறன், 26 மில்லியன் டன் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார். இத்திட்டத்தின் முந்தைய 2 சுற்றுக்களின் போது, 43 ஆயிரத்து 874 கோடி ரூபாய் அளவிற்கு புதிய முதலீடுகள் ஈர்க்கப் பட்டுள்ளதாகவும், இதனால் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார். 2021ஆம் ஆண்டு, ஜூலை மாதம் தொடக்கப்பட்ட. சிறப்பு வகை எஃகு உற்பத்தியாளர்களுக்கான, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டம், நவீன தேவைகளுக்கான சிறப்பு வகை உயர்தர எஃகு உற்பத்தி நாடாக இந்தியாவை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டதாகும்.

--------------------

*வானிலை* (11)

புதுச்சேரியிலும், கடலூர்-மயிலாடுதுறை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், இன்று கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 10ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. வடகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வங்கக் கடலில் ஆழந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலவுவதால், மீனவர்கள் இன்றும், நாளையும், இப்பகுதிகளுக்குசெல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி பகுதியில், 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------

*அரிசி ஏற்றுமதி* (9)

மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும், **வேளாண் பொருள், மற்றும், பதப்படுத்திய உணவுப்பொருள் ஏற்றுமதிப் பெருக்க வாரியம்,** முதல் முறையாக சத்தீஸ்கரில் இருந்து, கோஸ்டா-ரிக்கா நாட்டிற்கு, 12 டன் செறிவூட்டிய அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான போஷன் அபியான் இயக்கத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப அமைந்துள்ள இந்நடவடிக்கையினால், சத்தீஸ்கர் மாநில விவசாயிகள், அரிசி ஆலைகள், மற்றும், ஏற்றுமதியாளர்கள், சர்வதேச சந்தையில் அங்கீகாரம் பெற ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பீகாரில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் இன்றுடன் ஓயும் நிலையில், **தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெறும்** என, பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தின் ஏரிக் கட்டமைப்பு உட்பட, நாட்டின் **பாரம்பரிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஏற்பாடு**கள், LiFE இயக்கத்தினால் புத்துயிர் பெறுவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், **கேரளத்தில்**, கடலோர சமூகத்தினர் உட்பட அனைத்து பிரிவினருக்கும், மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட, 12 மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களில், **சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி**கள் இன்று தொடங்கி உள்ளன.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**